**செய்தி வெளியீடு எண்: 129** **நாள்: 21.02.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 20.2.2018 அன்று தலைமைச் செயலகத்தில், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் அரசு மருத்துவமனையில் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் உள்நோயாளிகள் பிரிவுக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 10 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மருத்துவக் கட்டடங்களை திறந்து வைத்து, 6 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மருத்துவக் கருவிகளை துவக்கி வைத்தார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு, உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை தோற்றுவித்தல், எளிதில் செல்லமுடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகளை அளித்தல் போன்ற பல முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் அரசு மருத்துவமனையில் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் உள்நோயாளிகள் பிரிவுக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் 6 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 200 மாணவிகள் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ள செவிலியர் பயிற்சி பள்ளி மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடம்;

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 2 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த புறநோயாளிகள் பிரிவு, 24 படுக்கைகள் கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள்

பிரிவுகள் மற்றும் 12 படுக்கைகள் கொண்ட தலைக்காய மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடம்;

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை சார்பில், மதுரை மாவட்டம், வலையங்குளம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடம்; தேனி மாவட்டம், குரங்கனி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடம்;

என மொத்தம், 12 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 5 கோடியே 17 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள கேத் லேப் கருவி மற்றும் 16 கூறு சி.டி. ஸ்கேன் கருவி, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள சி.டி. ஸ்கேன் கருவி ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் உமாநாத், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமத், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எட்வின் ஜோ, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் இன்பசேகரன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.2.2018**